கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்,
வடக்கு மாகாண சபை.
2021.10.07

சுற்றறிக்கை இல - 04/2021

சகல கூட்டுறவுச் சங்கங்களினதும் தலைவர்கட்கு,

அத்தியாவசியப் பொருள் கொள்வனவு

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையின் காரணமாக அத்தியாவசியப் பொருட்களின் கொள்வனவு மற்றும் விநியோகம் நிலையான தன்மையில் காணப்படாதுள்ளதனை அவதானிக்க முடிகின்றது. தற்போது கூட்டுறவுச் சங்கங்களை மேற்பார்வை செய்யும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களது கடமைப் பரப்பானது கூட்டுறவுப் பரிசோதகர்கள் என்ற நிலையல்லாது கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என்ற அடிப்படையில் சங்கங்களின் அபிவிருத்திக் கடமையில் பொறுப்பு வலிதாக்கப்பட்டுள்ளது.

எனவே கொள்வனவு உபசபையில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களது பங்குபற்றுதல் மற்றும் பொருட்கள் கொள்வனவு, விநியோகம் தொடர்பான சகல விடயங்களினையும் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்களையும் மேற்பார்வை செய்யும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அறிந்திருத்தல் ஆகிய இரு விடயங்களும் இன்றியமையாததாகும். எனவே கொள்வனவு உபசபைக் கூட்டங்களில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களது பிரசன்னத்தினை உறுதிப்படுத்துவதுடன் அவர்களது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கருத்திற் கொள்ளுமாறும் தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கூட்டுறவின் வளர்ச்சிக்கு தாங்கள் நல்கும் ஒத்துழைப்பு மிகவும் பாராட்டுதற்குரியது.

M.N

மு.நந்தகோபாலன்
**கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,**
**கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்,**
**வடக்கு மாகாண சபை.**

பிரதி - கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் -
யாழ்ப்பாணம்/கிளிநொச்சி/முல்லைத்தீவு/வவுனியா/மன்னார் - இவ்விடயம் தொடர்பில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் தங்கள் மேற்பார்வையின் கீழ் உள்ள சங்கங்களிற்கும் தெரியப்படுத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக